Registered as a News-paper in Ceylon
P. M. G. NO. H. A. 59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமான

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானு௵ ஆனிமீ ௩ உ (1943 ஜூன்மீ 17 வியாழக்கிழமை) [இல. உ0

## பண்டகசாலைச் சங்கங்களின் மகாநாடு

சென்ற சனிக்கிழமை மாலை 5-30 மணியளவில் பெருமாள்கோவிலடி சன்மார்க்கபோதனு வித்தியாசாலை மண்டபத்திற் கூடிய ஐக்கியபண்டகசாலைச் சங்கங்களின் மகாநாட்டில் நடைபெற்ற உத்தியோகத் தேர்தல் வருமாறு:—

தலைவர்.- திரு. S. R. கனகநாயகம் அத்வக்காத் உப-தலைவர்கள்:- காதி. S. M. அபூபக்கர் J. P. திரு. C. C. சோமசேகரம் வழக்கறிஞர் திரு. S. பதஞ்சலி வழக்கறிஞர் திரு. K. நேசையா இணைக் காரியதரிசிகள்:-திரு. M. R. காராளசிங்கம் வழக்கறிஞர் திரு. T. சீனிவாசகம் தனதிகாரி:-திரு. T. இராசநாயகம் கணக்குப்பரிசோதகர்:-S. P. கந்தையா 25 சங்கங்களைச் சேர்ந்த 25 பிரதிநிதிகள் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## லம்பெடுஸாவைக் 'கைப்பற்றிய' விமானி

லண்டன் ஜூன் 13—

லம்பெடுஸாவைக் 'கைப்பற்றிய' விமானியான சார்ஜண்ட் சிட்னி கொஹென் என்பவர் ஆறடி உயரமுள்ள 22 வயது வாலிபராவர். இவர் லண்டனின் கீழ்ப்பகுதியில் கிளப்டன் என்னுமிடத்தில் தமது சகோதரியுடன் முன்பு தையல் வேலை செய்துவந்தார்.

இவர் வசித்துவந்த வீடு ஒரு விமானத்தாக்குதலினால் தரைமட்டமாயிற்று. அவ்வமயம் இவர் வெளியே சென்றிருந்ததை இவரது சகோதரி தெரிந்துகொள்ளாத காரணத்தால் ரக்ஷிப்பு ஊழியர்களிடம் இடிந்து விழுந்த வீட்டுக்கு அடியில் புதையுண்டு போய்விட்டாரென்று தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் இந்த வாலிபரைத் தேடி இரு தினங்களாகக் கிண்டிக் கிளறிப் பார்த்தனர். அதற்குப் பின்னர் அவர் சேமமாகத் திரும்பி வந்தார். கொஹென் ராயல் விமானப்படையில் மூன்றரை வருடங்களுக்கு முன்னர்ச்சேர்ந்து மூன்று மாதங்களுக்கு முன்பு மால்டாவுக்குச் சென்றார்.

## புயலில் சிக்கிய படகுகள்

### மூன்று மீன்பிடித் தொழிலாளர் மரணமடைந்தனர்

வெலிகமை யூன் 12—

மீன்பிடிக்கும்பொருட்டுப் படகுகளிற் சென்ற சில மீன்பிடித் தொழிலாளர் கடும்புயலில் சிக்கியதன் விளைவாக மூவர் மரணமடைந்தனர். சிலபடகுகள் கவிழ்ந்தன. நான்கு மீன்பிடித்தொழிலாளர் கவிழ்ந்த படகொன்றுடன் தங்களைக் கயிற்றால் கட்டிக்கொண்டனர். இவர்கள் மாத்துறைக்கு மிதந்து சென்றனர். மற்றும் சில மீன்பிடித்தொழிலாளர் இவர்களைக் காப்பாற்றினர்.

புயலில் சிக்கி அவஸ்தைப்பட்ட மூவரையும் கண்டுபிடிக்க முயற்சிகளெடுக்கப்பட்டபோதிலும் பயன்படாமற்போய்விட்டது. அவர்கள் கடலில் இறந்திருக்கவேண்டுமென நம்பப்படுகிறது.

## மேற்கு ரூர் பலமாகத் தாக்கப்பட்டது

லண்டன், யூன், 15—

இன்று வெளியான பிருத்தானிய விமானப்படை மந்திரி காரியாலய அறிக்கையொன்று கூறுவதாவது:-

நேற்றிரவு நமது கனரக வெடிகுண்டு விமானங்கள் மேற்கு ரூர் பகுதியிலுள்ள இலக்குகளைத் தாக்கின. பெருந் தீவிபத்துகள் ஏற்பட்டமை தெரிந்தது. மேகம் அதிகமாக இருந்தபடியால் நமது விமானத்தாக்குதலால் ஏற்பட்ட சேதங்களைக் கவனிக்கமுடியவில்லை சத்துருக்கடற்பிரதேசத்திற் சுரங்க வெடிகள் விதைக்கப்பட்டன. நமது விமானங்களில் 18 திரும்பவில்லை. வடபிரான்ஸ், ஹோலந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளிலுள்ள புகையிரத இலக்குகள், படகுகள் முதலியவைகளை நமது ரோந்து விமானங்கள் தாக்கின. இரண்டு சத்துரு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. மேற்கு ரூரில் பிரதான ஆபர் ஹாஸென் தாக்கப்பட்டது.

### மற்றிக்குலேஷன் பரீக்ஷைக்கு ஏறக்குறைய 3000 பேர்

சென்ற செவ்வாய்க்கிழமை நடைபெற்ற லண்டன் மற்றிக்குலேஷன் பரீக்ஷைக்கு ஏறக்குறைய 3000 பரீக்ஷார்த்திகள் சமுகமாயிருந்தனரென்றும் இதற்குமுன் நடைபெற்ற எந்தமற்றிக்குலேஷன் பரீக்ஷைக்கும் இவ்வளவு பரீக்ஷார்த்திகள் சமுகமாகவில்லையென்றும் இனிமேல் இந்தப் பரீக்ஷை நடைபெறமாட்டாதென்றுந் தெரிகிறது.

## 12 ஜப்பானியக்கப்பல்கள் பாதாளம் போயின

வாஷிங்டன், யூன், 14—

பஸிபிக் சமுத்திரத்திலும் தூரக்கிழக்குச் சமுத்திரங்களிலும் பன்னிரண்டு அச்சுக்கப்பல்கள் ஆழ்த்தப்பட்டனவென்றும் ஐக்கிய அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலொன்று அறிவிப்பதாக இன்றிரவு இங்கு வெளியிடப்பட்ட ஐக்கிய அமெரிகக் கடற்படை அறிக்கையொன்று கூறுகிறது.

அந்த அறிக்கை மேலுங் கூறுவதாவது:-

"பஸிபிக்கிலும் தூரக்கிழக்கிலும் உள்ள கடல்களில் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளின் பலாபலன்கள் பின்வருமாறு என்று ஐக்கிய அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்கள் அறிவிக்கின்றன:—ஒரு நாசகாரி ஆழ்த்தப்பட்டது. ஒரு பெரிய துருப்புக்கப்பல் ஆழ்த்தப்பட்டது. ஐந்து நடுத்தரப் பருமனுள்ள வர்த்தகக் கப்பல்கள் ஆழ்த்தப்பட்டன. ஒருபெரிய இழுவைககப்பல் ஆழ்த்தப்பட்டது. ஒரு ரோந்துக்கப்பல் ஆழ்த்தப்பட்டது. ஒரு சிறிய "சப்ளை" கப்பல் ஆழ்ததப்பட்டது. இரு சிறிய சாககுக்கப்பலகள் ஆழ்த்தப்பட்டன. ஒரு பெரிய எண்ணெய்க்கப்பல சேதப்படுத்தப்பட்டது. ஒரு நாசகாரி சேதமாக்கப்பட்டது. ஒரு நடுத்தரப் பருமனுள்ள [illegible] த்தப்பட்ட[illegible] மூழ்கியிருக்கவேண்டும். ஒரு நடுத்தரப் பருமனுள்ள துருப்புக்கப்பல்

## ஐரோப்பாமீது நேச தேசப் படையெடுப்பு

லண்டன் யூன் 14—

ராய்ட்டரின் விசேஷ நிருபர் அறிவிப்பதாவது:

நேச தேசப் படையெடுப்பு இவ்வாரத்தில் ஆரம்பிக்கப்படலாம் என்று ஜெர்மன் ஆதிக்கத்திலுள்ள பாரிஸ் றேடியோவின் இராணுவ விமர்சகரான ஜீன் பாக்குவிஸ் இன்று கூறினர். அவர்மேலுங் கூறுவதாவது:

நேச தேசங்கள் கேலி செய்வதையும் பயமுறுத்துவதையும் நிறுத்தி விட்டன வென்பதிலும் பலத்த நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்குச் சமயம் வந்து விட்டதென்பதிலும் சந்தேகமில்லை. எந்த நிமிஷத்திலும் படையெடுக்கலாமென்று நேசதேசங்கள் கூறியிருக்கின்றன. ஆகையால், எத்தினத்திலும் படைகள் இறக்கப்படுமென்று நாம் எதிர்பார்க்கவேண்டும். ஐரோப்பாக் கண்டத்தின் மீது நடத்தும் ஆரம்பத் தாக்குதலின்போது தமது துருப்புகள் தொகையில் அதிகமாயிருக்குமென்ற நம்பிக்கை ஆங்கிலோ—அமெரிக்க இராணுவத்திற்கு இருக்கிறது. ஜெர்மன் விமானப் படையிற் பெரும்பகுதி கிழக்கில் மாட்டிக்கொண்டிருக்கின்றதென்பதினாலும் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றதென்பதினாலும் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. தாம் படையெடுத்துச் சென்று கைப்பற்றும் ஒவ்வொரு நாடுகளிலுமுள்ள இரகசிய இயக்கங்கள் தமக்கு அதிக உதவியளிக்குமென்று நேசதேசங்கள் எதிர்பார்க்கின்றன.

## டச்சுக் கடற்கரை ஓரமாகச் சத்துரு கப்பற் கூட்டம்

லண்டன் யூன் 14

மொஸ்கோவிலிருந்து ராய்ட்டரின் விசேஷ நிருபர் பின்வருமாறு எழுதுவதாவது:-

ரோஸ்டோவிற்கு மேற்கே ஜெர்மானியர் நேற்றும் பலமாகத் தாக்கினர். குளிர்காலத் தாக்குதலுக்குப் பிறகு டாகன்ராக்கிற்குச் செல்லும் புகையிரதப் பாதையில் ஒரு பாகமே ருஷ்யரிடம் இருந்துவருகிறது. இப்பகுதியில் கடும்போர் நடைபெற்று வருகிறது. சனிக்கிழமையன்று சில இடங்கள் அடிக்கடி கைமாறின. ஆனால், நேற்றிரவு முதல சோவியத் படைகள் அவைகளுடைய தளங்களைப் பலமாகப்பாதுகாத்து வருகின்றன. சோவியத் விமானப் படையும் மிகவும் சுறுசுறுப்பாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. ஓரல் பகுதியில் பிரதான ஜெர்மன் தளமாகவுள்ள பிரியான்ஸ்க் சென்ற 48 மணி நேரத்திற்குள் 14 முறை தாக்கப்பட்டது. தரை நடவடிக்கையும் அதிகரித்திருக்கிறது.

இன்று வெளியான சோவியத் அறிக்கையொன்று கூறுவதாவது:- நேற்றிரவு பிரதானமான மாறுதலகளொன்றுமில்லை.

சேதமாக்கப்பட்டது.

[illegible] நடவடிக்கைகள் இதற்கு [illegible] வெளியான கடற்படை அறிக்கை எதிலும் அறிவிக்கப்படவில்லை.

## கல்விப் பகுதி அதிகாரிகள்

### பாடசாலைகளோடு விசேட தொடர்பு வைத்துக் கொள்ளப் புதிய திட்டம்

பாடசாலைகளுக்கும் கல்விப் பகுதியைச் சேர்ந்த நிர்வாக அதிகாரிகளுக்கு மிடையில் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தும் நோக்கத்தோடு வித்தியாகர்த்தர் மிஸ்றர். எச். எஸ். பெரேரா ஒரு புதிய திட்டத்தைத் தயாரித்திருக்கிறார். குறித்த திட்டம் இன்று நடைமுறைக்கு வருகிறது.

கல்விப் பகுதியில் வேலை செய்து வரும் அதிகாரிகளுக்கு ஏராளமான வேலைகளிருப்பதால் ஒரு குறித்த பாடசாலையைப் பற்றிய பிரச்னையை நேரடியாகக் கவனிப்பதற்கு இதுவரை முடியாமலிருந்தது. இதன் பயனாகக் குறிப்பிட்ட அந்தப் பாடசாலையின் பிரச்னை கவனிக்கப்பட்டிருந்தால் என்ன நன்மை ஏற்படுமோ அந்த நன்மை ஏற்பட முடியாது போய்விட்டது.

வித்தியாகர்த்தர் உதவி வித்தியாகர்த்தர்களைக் கலந்து பேசிய பிறகும் பாடசாலைகளின் நிலைமையை நன்குபரிசீலனை செய்த பிறகுந்தான் இந்தத் திட்டத்தை வித்தியாகர்த்தர் தயாரித்திருக்கிறார்.

அத்திட்டத்தின்படி ஒவ்வொரு குறிப்பிட்ட பகுதியும் ஒவ்வொரு உதவி வித்தியாகர்த்தரின் மேற்பார்வைக்கு ஒதுக்கப்படுமென்றும் சம்பந்தப்பட்ட உதவி வித்தியாகர்த்தர்கள் தத்தமக்குரிய பாடசாலைகளுக்கு அவ்வப்போது விஜயஞ் செய்து அப்பாடசாலைகளின் கஷ்டங்களையும் தேவைகளையும் கவனிப்பரென்றும் தெரிகிறது. பாடசாலைகளில் இம்மாதிரியான விசேஷக் கவனம் செலுத்துவதனால் நல்ல பலன் கிடைக்குமென்று உணரப்படுகிறது.

மேற்கு, தென்பகுதிகளிலுள்ள பாடசாலைகள் முதலாவது உதவி வித்தியாகர்த்தரின் மேற்பார்வையின்கீழ் இருக்குமென்றும், மத்திய வடமேற்குப் பகுதிகளிலுள்ள பாடசாலைகள் இரண்டாவது உதவி வித்தியாகர்த்தரின் கீழ் இருக்குமென்றும் மூன்றாவது உதவி வித்தியாகர்த்தர் வட கிழக்குப் பகுதிகளின் பாடசாலைகளைக் கவனித்துவருவாரென்றும் தெரிகிறது.

அதிகாரிகளுக்கும் பாடசாலைகளுக்கும இம்மாதிரியான தொடர்கள் இருந்து வருவதால் அப் பாடபாடசாலைகளின கல்வி நிர்வாகத்தை அவ்வதிகாரிகள் பரிசீலனை செய்யவும் வசதி ஏற்படுகிறது. இதுமட்டுமன்றி உதவி வித்தியாகர்த்தர் ஒரு குறிப்பிட்ட பாடசாலையின் தேவையை அறிந்து கொண்டவுடன் அவ்விஷயத்தில் தாமதமின்றி நடவடிக்கை எடுத்து அந்தக் குறையை நிவிர்த்திக்கவும் அவருக்கு அவகாசம் கிடைக்கிறது. பாடசாலைகளின் குறைகள் அல்லது தேவைகள சம்பந்தமாகப் பெரும்பாக வித்தியாதரிசகரிடம் இருந்து அறிக்கை கிடைக்கும் வரை முன்போல் அவர் காத்திருக்க வேண்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானு
ஆனிமீ ௩௨ வியாழக்கிழமை

## விஷகடிக்கு விமோசனம் இல்லையா?

"பாம்பு முதலிய விஷசெந்துக்கள் தீண்டினல் அவற்ருல் தீண்டப்பட்டார்க்கு எவ்வகையான விமோசனமு மில்லையென்று சாதிக்கின்ருர் இலங்கையில் வைத்தியப் பகுதியிற் பொறுப்பு வாய்ந்த உத்தியோகம் வகித்திருக்கும் டக்ரர் L. நிக்கொல்ஸ் என்பவர்; "மோசமான துப்பாக்கிக்குண்டுப் பிரயோகத்தினல் ஒருவர் சாவது எத்துணை நிச்சயமோ, பாம்புகடித்தமையினற் சாதலும் அத்துணை நிச்சயம்; விஷகடியைமாற்றுவோ மென்று சிலர் வாதிப்பது பொய்; விஷந் தீண்டாத போதும் விஷவைத்தியர்கள் விஷகடியென்று நினைத்து வைத்தியஞ் செய்ததை நான் அறிவேன்; ஒரு பசுவை யாரோ துப்பாக்கியாற் சுட்டுக் கொன்றுவிட, அப் பசுவின் மரணத்திற்குக் காரணம் விஷகடியென்று தம் அறியாமையினல் அப் பசுவின் சொந்தக்காரர் நம்பியமை எனக்குத் தெரியும்; விஷகடியை மாற்றும் பொருட்டு அரசினர் ஏதும் பணஞ் செலவிட்டு வருகின்றனரென்ருல் அந்தப்பணம் வீண்செலவாகுமென்பது என்னுடைய எண்ணம்" என்கிருர் குறித்த டக்ரர் நிக்கொல்ஸ்.

இந்த டக்ரருடைய பொருந்தாக் கூற்று இப்படியாக, கொழும்பு ஆயுர் வேதக்கல்லூரித் தலைமையாசிரியராகிய "கப்ரின்" பணிக்கர் இந்த விஷயமாக என்ன சொல்லுகிருரென்று பார்ப்போம். பணிக்கர் ஆயுர் வேத முறையில்மாத்திரமல்லாமல், மேலைத்தேச வைத்திய முறையையும் பயின்று மேலான பரீட்சையிற் சித்தியடைந்தவர். அவர் என்ன சொல்லுகிருர்; "விஷகடி வைத்தியத்தில் மேலைத்தேச வைத்தியர்களின் ஆராய்ச்சி இன்னமும் பூரணமான முற்றை அடையவில்லை; மேலைத்தேச வைத்தியமுறை வேறு; விஷவைத்தியம் வேறு; ஆயுர்வேத வைத்தியத்தில் விஷவைத்தியத்தை வேருகவே கூறப்பட்டிருக்கிறது; விஷப் பாம்புகள், அவைகளின் சாதி, அவ்வப் பாம்புகள் உமிழும் நஞ்சின் பேதம், அவ்வகையான நஞ்சை அகற்றும் முறையென்னுமிவைகளும் இவை போன்ற இன்னும்பல உபாயங்களும் இந்துக்களின் விஷவைத்தியமுறையிற் சொல்லப்பட்டிருக்கின்றன; விஷத்தினல் தீண்டப்பட்ட ஒருவரைப் பார்த்தவிட்டே, இவரை இன்ன விஷந் தீண்டியதென்று நிச்சயமாக விஷ வைத்தியர்கள் சொல்லமுடியும். மேலும் விஷவைத்தியத்தில் மணி, மந்திரம், ஔஷதம் என்னும் மூன்றும் வேண்டியசமயத்தில் உபயோகிக்கப்படுகின்றன. உலகத்திலுள்ள ஒவ்வொரு விஷத்திற்கும் மாற்று மருந்துகள் தனித்தனி யுண்டு. விஷ வைத்தியத்திலே சிற்சில இரகசியமான நுட்பமுறைகள்உண்டு; ஆனல் அந்த இரகசியங்களை அறிந்தவர்கள் தங்களளவிலன்றிப் பிறருக்குச் சொல்லிக் கொடுக்கின்றிலர்."

மேலைத் தேசத்துட் சிலரும், மேலைத் தேசக் கல்வியை மாத்திரங் கற்ற இந்நாட்டினர் சிலரும், தாங்கள் படித்தோ, அனுபவத்திலோ அறிந்தவைகளை மாத்திரம் நம்பி, மெய்யென்று ஒப்புக்கொள்வார்களேயொழிய சுருதி யுத்தி அநுபவம் என்னுமிவைகள் மூன்றினையுங்கொண்டு அறிஞர் உண்மையை எடுத்துக்காட்டினலும், அந்தச்சிலர் அவற்றை ஒப்புக்கொள்ளமாட்டார்கள்; இப்படியான மனப்பான்மையோடு கூடியவர்களைச் சேர்ந்த ஒருவர்தான் டக்ரர் நிக்கொல்ஸ் என்பவரும் என்று நாம் எண்ணக் கிடக்கிறது. எங்கள் நாட்டிலே ஆயுர்வேத வைத்தியர் சித்த வைத்தியர் எனப்படுவோர் வேறனவர், விஷவைத்தியர்வேறனவர் என்பதை எவருமறிவர். முதற் சொல்லப்பட்ட முறையிலுள்ள வைத்தியர்கள் விஷ கடிக்கு வைத்தியஞ் செய்ப வல்லவரல்லர்; விஷ வைத்தியர்கள் தமக்கென ஒரு தனி முறையும் தனித் திறமையு முடையவராகக்காணப்படுகின்றனர். அவர்கள் செய்யும் அற்புதமான வைத்தியமுறையை எடுத்துச் சொல்லப்புகின் மிக விரியும். ஒருவருக்கு விஷந் தீண்டிவிட, வைத்தியத்தின் பொருட்டுத் தம்மை அழைத்துக்கொண்டு போக வரும் ஆள் அல்லது ஆட்கள் என்னுமிவர்களுடைய வரவையும் கூற்றையும் இன்ன பிறவற்றையும் அவதானித்து அந்தவைத்தியர், கடித்தபாம்பு என்ன சாதி, கடித்த இடம், சமையம், கடித்தமைக்கு ஏது, பட்டபல்லு இத்தனை, குறித்த ஆள் தப்புமோ தப்பாதோ, தீண்டியபாம்பு தப்பிப்போய் விட்டதோ, அடித்துக் கொல்லப்பட்டதோ, மரணக்கடியோ, மாறக்கூடிய கடியோ என்ற இவைகளையெல்லாம் ஒன்றன்பின் ஒன்ருகப் பிழையின்றிச் சொல்லுவார்கள்; விஷந் தலைக்கேறிவிட, தம்மிடத்தே பிரேதம்போலக் கொண்டு வரப்பட்ட விஷந் தீண்டினேரை, உடனுக்குடன் மாற்றி நடந்துசெல்லும்படி செய்த விடகாரிகளை இவ்வியாசத்தை எழுதும் நாம நேரிற் பார்த்துள்ளோம்; இவை மாத்திரமா, தூதன் வந்து தம்மை விடம் தீர்க்கும்படி வரவேண்டுமென அழைக்க, "விஷந் தீண்டப்பட்டவர் மாண்டுபோனர் இனி வருவதாற் சுகமில்லை" என்று சொல்லி வைத்தியர் போகாதொழிய, வந்ததர் மீண்டுபோய் தம்போத குறித்த வீட்டில் அழுகையொலி கேட்கப்பட்டதென்பதை நேரில் அறிந்துள்ளோம்; இவ்வளவோடு மாத்திரம் நில்லாது, விடந் தீண்டியதென்று ஒருவர் சொல்ல, ஒரு நூலையெடுத்துக்கொடுத்து "இதனைக் கடிவாய்க்கு மேற் கட்டிவிடு என்று சொல்லியும், இல்லையேல் சிறிது மண்ணை அள்ளிக் கொடுத்து இம் மண்ணைக் கொண்டுபோய்க் கடிவாயில் இடு, விஷம் ஏறமாட்டாது, பிறகு நாம வருவோம்" என்று அப்படியே செய்வித்து விஷத்தைத் தடுத்துப் பின் தாம் நேரிற் போய் வைத்தியஞ் செய்து விஷமகற்றும் வைத்தியர்களையும் நாம் அறிவோம், இந்த உலகம் அறியும்; குறித்த டக்ரர் நிக்கொல்ஸ் மாத்திரம் இவைகளை யறியார் போலும்.

# உலகம்பலவிதக் கதை

(முற்ருெடர்)

## "என்வரலாறு"

சுந்தரேசுவரன் நகுலேசுவரியென்னுமிவர்களின் விவாக முகூர்த்த தினத்திற்கு இன்னும் நான்கு ஐந்துநாட்கள்தான் உண்டு; முருகேசபிள்ளையும் மனைவியும் அதற்காகவேண்டிய கருமங்களைப் பார்ப்பதிலேயே ஈடுபட்டிருந்தார்கள்; ஒருநாட் பிற்பகல் 4 மணி வரையிலிருக்கும்; காஞ்சனமாலையும்பணிப் பெண்ணும் தலைவாசற்பக்கத்தில் இருந்தார்கள்; அந்தச் சமயத்தில் ஒரு சிங்களப்பெண் பதினறு பதினேழு வயசுவரை மதிக்கலாம், கவலையோடு கூடியவளாய் அங்கே வந்து ஒதுங்கிநின்ருள்; வந்தவளைக் காஞ்சனம் பார்த்து, "நீ ஆர்? இங்கே வந்த நோக்கமென்ன? எங்கிருப்பது? உனக்குத் தமிழ் தெரியுமா" என்று ஆவலோடு வினவுதலும், "அம்மா, எனக்குக் கொஞ்சங் கொஞ்சம் தமிழ்பேசத் தெரியும்; தமிழ் பேசினல் நல்லாய்விளங்கும்; உங்களுக்கு வேலைக்காரி தேவையோ? என்னை வேலைக்கு எடுக்க ஏலுமோ" என்று நின்றபடி சொன்னள்; "ஏன் நிற்கிருய், உப்படி இரு, இப்பொழுது எங்கள் அம்மா ஐயா இங்கே இல்லை, வெளியேபோய்விட்டார்கள்; பொழுதுபடுவதற்கிடையில் வந்துவிடுவார்கள்; வந்தபிறகு அவர்களைக் கேட்டுச் சொல்லுகிறேன்" என்றுசொல்லிச் காஞ்சனம் அவளை ஒருபுறத்தே இருக்கச்செய்தாள்; "அம்மா, கொஞ்சம் தண்ணீர் வேணும் குடிக்க" என்று அந்தச் சிங்களப் பெண் கேட்க, காஞ்சனமாலை தங்கள் பணிப்பெண்ணைப் பார்த்துத் தண்ணீர் கொண்டுவந்து வார்க்கச் சொல்லிவிட்டு, "ஏதும் ஆகாரம் வேணுமா" என்று சிங்களப்பெண்ணைக் கேட்க, "இப்போது வேண்டாம், அம்மா, பிறகு ஆகட்டும்" என்று பணிவுடன் சொன்னள். அவள் தண்ணீர் குடித்தபின், காஞ்சனம் அவளைப்பார்த்து "நீ இவ்வளவு காலமும் யார் வீட்டில் இருந்தாய், உன் சொந்தவூர் எது? இந்த ஊருக்கு வந்து எவ்வளவுகாலம்; இப்பொழுது எங்கிருந்து வருகிருய்" என்று இப்படிப் பலகேள்விகளைக் கேட்டாள்; அவள் தன் சொந்தவூர் இன்னதென்று தெரிவித்துவிட்டு "அம்மா, எனக்குத் தாய் தகப்பன் இல்லை, ஒரு அண்ணன்தான் உண்டு, நான் ஏழுஎட்டு வயசாயிருக்கும்போதே எங்கள் ஊருக்கு அயலிலுள்ள ஒரு பட்டினத்தில் உத்தியோகம்பார்த்து வந்த தமிழ் ஆளின் வீட்டில் வேலை செய்வதற்காகக் கொண்டுபோய் விட்டிருந்தார்கள்; அவர்களோடு மூன்றுவருடம் இருந்தேன்; அவர்கள் மிகவும் நல்லவர்கள்; அந்த ஐயாவினுடைய அம்மா என்னைத் தன் பிள்ளைபோலப் பாவித்து நடத்திவந்தாள்; என்னுடைய பொல்லாதகாலம், அந்த ஐயா உத்தியோகம்மாறித் தங்கள் சொந்த ஊருக்கே போகவேண்டி ஏற்பட்டது. அந்தஐயா எனக்குப் பணமுந்தந்து என் அண்ணனைக் கூப்பிடுவித்து "நாங்கள் உத்தியோகம் மாறி எங்கள் சொந்தவூருக்கே போகிருேம், இவள் பெரியபிள்ளையாகும் காலம் கிட்டிவிட்டது; ஆனதால் எங்கள் ஊருக்கு இனிமேற் கூட்டிக்கொண்டுபோவது நல்லதல்ல" என்று சொல்லி அண்ணருக்கும் ஏதோ கொஞ்சப்பணம் கொடுத்து என்னை அவருடன் அனுப்பிவிட்டார்கள்; என்னை விட அந்த அம்மாவுக்குப் பிரியமில்லையானலும், ஐயாவின் சொல்லைத் தட்டிநடக்கக்கூடாதென்றெண்ணி அம்மாளும் அதற்கு உடன்பட்டு எனக்குத் தேவையான உடுப்பு எல்லாந் தந்து அனுப்பினள்; அதன்பிறகு நான் அண்ணன் வீட்டிலேயே போய் இருந்தேன்; என் அண்ணனுக்கு என்னில் நிரம்பிய அன்புண்டு; ஆனல் அண்ணன்பெண்டில் கூடாத மனுஷி; என்மேல் எரிச்சல்கொண்டாள்; என்னைத் திட்டுவாள், வைவாள், எனக்கு வயிறு நிறையச் சோறுதரமாட்டாள்; அண்ணை நல்லதுணி வாங்கித் தந்தாலும் நான் அதை உடுக்க அவள் மனம் பொருள்; அண்ணன் இல்லாத நேரத்தில் என்னை அடிப்பாள்; நான் இவைகளையெல்லாம் அண்ணனுக்குச் சொன்னற் குடும்பக்கலகம் வருமென்று பயந்து சொல்லாமல் விட்டேன்; என்னளவில் மாத்திரம் கலங்கிக்கொண்டிருந்தேன்; ஒரு நாள் அவள் என் கன்னத்தில் அறைய என் கன்னம் வீங்கிவிட, வீட்டிற்கு மீண்டுவந்த அண்ணன் என் கன்னம் வீங்கியிருப்பதைக் கண்டு என்னைத் தனியே கூப்பிட்டு "என்ன நடந்தது தங்காய்" என்று இரக்கத்தோடு கேட்க, நான் அவள் எனக்குச் செய்யும் கொடுமைகளையெல்லாம் சொல்லி அழுதேன்; அவர் தானுங் கவலைப்பட்டு என் கண்ணீரைத் துடைத்து, "நீ அழாதே, மனம் வருந்தாதே, அவள் பொல்லாதவளென்று எனக்குத் தெரியும்; ஆனலும் இனி என்ன செய்யலாம்; இன்னும் சிலநாளில் உன்னை எங்கேனும் நல்ல இடத்திலே கொண்டு போய்ச் சேர்த்துவிடுகிறேன்; அவ்வளவுகாலமும் அவளோடு சமாதானமாக நடந்துகொள் என்று என்னைத் தேற்றிப் புத்திசொன்னர்; நானும் அப்படியே இருந்தேன்; கொஞ்சநாட்செல்ல, என் அண்ணை நான் தனியே இருக்கும் சமயம் பார்த்து என்னிடம் வந்து "தங்காய், எங்கள் சாதியைச் சேர்ந்த டக்ரர் வேலைமாறித் தம்முடைய குடும்பத்தோடு வேறு ஊருக்குப் போகிருராம்; 'ஆயா' ஒருத்தி வேணுமாம், உனக்குப் போகப் பிரியமா" என்று கேட்டார்; இங்கே இருந்து கஷ்டப்படுவதைக் காட்டிலும் அங்கே போனல் நல்லாயிருக்கலாம் என்று நினைத்து நானும் அதற்கு ஓம் என்றேன்; உடனே அண்ணை என்னை அந்த டக்ரர் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டுபோய், இவள் என் தங்கை, இவளுக்குத் தாய் தகப்பனில்லை, இவளநல்லவள், நேர்மையுள்ளவள்; நீங்கள்தாம் இவளுக்குத் தாயும் தகப்பனும் என்று பாவித்துக் கொள்ளுங்கள்" எனச் சொல்லி

தொடர்ச்சி 5 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேகவியோகம்

காரவெட்டிமேற்கு வாசியும் தச்சுவேலைகளில் மிகச் சிறந்த விற்பன்னரும் வதிரி தேவரையாளிச் சைவ வித்தியாசாலைப் பரிபாலகன் திரு. கா. சூரனின் தந்தையும் ஷை வித்தியாசாலைக் கட்டிடத்திற்கு அக்காலம் உதவிபுரிந்து தொண்டாற்றியவரும், திரு. மு. மண்டலம் குத்தகைகாரனின் சிறிய தந்தையும், நந்தனர் வித்தியாசாலை ஆசிரியர் திரு. நீ. சுப்பிரமணியம் அவர்களின் மாதுலனுமாகிய திரு. வே. காத்தானென்பவர் (கார்த்திகேயனென்று மழைப்பார்கள்) நிகழும் சுபானு வருடம் வைகாசிமாதம் 25ந் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 12 மணிவரையில் தனது 90ம் வயதில் வருத்தமேற்பட்ட 6 மணித்தியாலத்துள் மரணவேதனை சற்றுமின்றித் தேகவியோகமாயினர். இவரது ஆன்மா சாந்தியாகுக. கடித.

## கடிதம்

### மன்னார்-முல்லைத்தீவு உபதேர்தல்

ஸ்ரீ பத்மநாதன் அவர்களின் பிரிவால் ஏற்பட்ட ஸ்தானத்திற்குப் பிரதிநிதிகளாகவர பலர் முற்பட்டபோதிலும் இறுதிவரை இருவர்தான் அபேட்சகர்களாக விளங்குகின்றார்கள். இவர்களுள் தனது கொள்கையை வெளிப்படையாக எடுத்துக் கூறிக்கொண்டு இப்பொழுது தனது வாழ்க்கையைப் பொதுசன சேவைக்கு அர்ப்பணம் பண்ணத் துணிந்திருக்கும் வழக்கறிஞர் ஸ்ரீ C. சுந்தரலிங்கம் அவர்கள், 'எங்கள் பத்மநாதன் போயினரே', என்று துன்புறும் வாக்காளர்களின் துயரைப் போக்க வல்லவர். இவரைப் பேராசிரியர் என்றால் தான் விளங்கும். இவர் உரும்பராயில் சுப்பிரமணியர் செல்லப்பரின் புத்திரர் மாணவராக இருந்த காலத்தில் எத்தனையோ பட்டங்களையும் பதவிகளையும் பெற்றவர். 1917-18-ல M SC,க்கு கணிதத்தில் திறமை காட்டியவர். அக்காலந் தொட்டே சிவில் சேவிஸ் சட்டம் பொருளாதாரம் தற்காலச் சரித்திரம் அரசியல் ஆதியவற்றில் தக்க வன்மை பெற்றுப் பதவிகளையும் பெற்றவர். 1919 இல் சீமையிற் பல வாதங்களில் ஈடுபட்டவர். சரோஜினி நாயுடு, ஸ்ரீநிவாச சாஸ்திரி, செக்கோசிலவேக்கிய தலைவர் தோமாஸ்மசார்க், வெளிநாட்டு மந்திரி அந்தோனி ஈடன் போன்ற பிரபலஸ்தர்களின் நண்பைப் பெற்றவர். சீமையில் எத்தனையோ சங்கங்களையும் கழகங்களையும் நடத்தியவர். இலங்கை, இந்திய சிவில் சேவிஸில் பட்டம் பெற்றவர். வதுளையிற் பொலிஸ் நீதிபதியாகவும், மறியற்சாலை அதிபதி (Superintendent) ஆகவும் இருந்து இலங்கை அரசின பல்வேறு கிளைகளையும் நன்கு அறிந்தவர். அநுபவ வாயிலாக அவற்றின் ஊழல்களையும் குறைநிறைகளையும் கண்டவர். 1922 ல் இவர் ஆநந்தாக் கல்லூரிப் பிரதம உதவியாசிரியராகக் கடமையாற்றிய காலத்தும் பின்னர்க் கணிதப் பேராசிரியரால மகிமைக் கதிரையில முதன் முதல் வீற்றிருந்த காலத்திலும் உத்தியோகப் பஞ்சம், இராமநாதன் விக்கிரகம், சமாசன இயக்கம், ஆலயப்பிரவேசம் முதலிய எத்தனையோ பல இயக்கங்களிற கலந்துழைத்தவர். அன்றியும் 1931 ல அதற்கென அரசினர் விடைபெற்று மைசூர் சென்று அரசியல், பொருளாதாரம், சமூக முன்னேற்றம், கல்வி முதலிய துறைகளில் இந்தியாவின நிலையை நேர்முகமாகக் கண்டு கற்றவர்.

(தொடர்ச்சி 4-ம்பக்கம்)

# மன்னனும் மன்னுயிரும்

திரு. ஜெ. நாராயண சுந்தரமையங்கார் அவர்கள்

(முற்றொடர்)

இப்பெற்றியே, மன்னன் தன் காமம் முதலான குற்றங்கடிந்த வழியே, மன்னுயிரிடத்துக் குற்றங் கண்டு கடிதல் பிறர்குற்றங்காணுங் குற்றமாகாது முறைசெய்தலாமென்பதூஉம், அங்ஙனம் தன்குற்றங்கடிந்தானே பிறர் குற்றங்கண்டு கடிதற்குரியனாமென்பதூஉம், அங்ஙனம் செய்தல் அருமையுடைத்தாமென்பதூஉம் பெறுமாறு,

'தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங்
காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு'
(குறள்-436)

என்று பொய்யில் புலவர் புகன்றிருப்பதனையும் இங்கு சிந்தித்து, அரசன் நிலை யாவரும் அவாவுதற்கொத்த எண்மையுடைத்தாகாத தன்மையுடைத தென்பதனை அறியலாம். இதனுட் 'காண்கிற்பின்' என்றது, காண்டலின் அருமைகாட்டி நிற்றல் காண்க.

இன்னும், வஞ்சிசூடி மலைத்து வந்த மன்னர்க்கண்டு, தன்னுயிரைப் பெரிதாகக்கருதி அஞ்சிநின்று தன்னைச்சார்ந்தாரைத் தவிக்கவிடும் மன்னன், பழிமிகப்படைக்கும் இழிநிலையெய்தி, மீள்கிலாநிரயத்து வீழற்குரியனுவனென்பதூஉம் காவலினருமை காட்டுதல் காணலாம். இதனை,

'தஞ்சென வொதுங்கினோர், தனது
பாருளோர்
எஞ்சலின் மறுக்கினோடுரியல்
பேயுற
வஞ்சிசென் றிறுத்தவன் வாகை
மீக்கொள
அஞ்சின மன்னவ னாக யானுமே'
(கம்ப-அயோத்தியா-பள்ளி-108)

என்று, கேகயர்கோமகள் இழைத்த கைதவம் ஐய நீ யறிந்திலைபோலுமால்' என்ற கோசலையைத் தெருட்டுவான் சூளுறுகட்டுரை சொல்லன்மேய பரதன் கூறியதாக வரூஉம் பாடலான் அறிபலாம்.

இவ்வாற்றானே, வெருவந்தசெய் தொழுகும் வெங்கோல்வேந்தாய் நின்று மற்றைநாளெல்லாம் வாளாபோகம்நுகர்ந்து கழிந்து, தேனர்கள்* தன்னாட்டிற் படைகொண்டு மலைய வந்தபின்றை, அவரைப் பொருள்கொடுத்து உவப்பித்துப் போக்குதலையே பலகாலும் மேற்கொண்டு தன்மக்களிடம் அதற்கென்றே ஒரு வரி† விதித்து வாழ்ந்து, இறுதியில வீழ்ந்து வேற்றுநாடுபுக்கொளித்தொழிந்த ஒரு மன்னனும்‡, தன்னகரினை எரி சூறையாடவிட்டு, மேனிலையொன்றின்கண் இருந்து, இசைக்கருவியொன்று பற்றி யின்பமெய்திநின்று, அவ்வெரியின் தாண்டவத்தைக் கண்டு களித்துக் கழிந்தானொரு காவலனும் ⁕ போன்றார் மாலையிற்சேராது, தன்னுயிரினும் சிறக்க மன்னுயிரிடத்துக் கொண்ட அன்பானே, தன் என்பானும் பிறவற்றானும் தான் அவற்றிற்கே யுரியனாய்த் தனக்கெனவாழாத் தகைமைகொண்டு நிற்கும் தண்ணளிவேந்தே வேந்தாமென்பதூஉம், அவ்வேந்தே போற்றற்குரிய ஏற்றம்பெறு மென்பதூஉம் பெறும்.

*Danes. † இது 'Danegeld' எனப்படும். ‡Ethelred the unready இவன் வரலாற்றை இங்கிலாந்துதேச சரித்திரத்திற்காணலாம்.

⁕Nero. இவன் உரோமாபுரியில வாழ்ந்தவன். இங்கூறைத்த வரலாறு பற்றி Nero was fiddling when Rome was burning [illegible] ஆங்கிலவழக்[illegible] அறிந்தது.

இங்ஙனம், இராமன் தன்னுயிரினும் சிறக்க மன்னுயிர்மேல் வைத்த அன்பானே அம்மன்னுயிர்க்குரியனாய், அதற்கொரு கைம்மாறுகருதாது நிற்கும் இயல்புடையனாதல்கண்டன்றே, அரசச்செல்வம் பெறும் அவனுக்கு நீர்நிறையும் ஊருணியையும், உள்ளூர்ப்பழுக்கும் பயன்மரத்தையும், மழைபொழியும் கருமுகிலையும் ஒப்பாக்கி, வேத்தவை தயரதனைநோக்கி விளம்பியதூஉமென்க. தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளர்க்கு இவ்வுவமைகள் கூறப்படுதல் திருக்குறள் முதலிய நூல்களால் அறியலாம். இவற்றுள் ஊருணியென்பது, அப்பெயரானே தனக்கென்றிராது, யாவர்க்குங் கோடற்கெளிதாகி, வேற்றுமையின்றிப் பிறர்க்கே பயன்படுந்தன்மையை விளக்கிநிற்றல் கண்டு களிக்கற்பாற்று. என்னை? ஊருணியெனவே, அது தானுணியாவதன்றி ஊரால் உண்ணப்படுவதென்பது விளங்குதலானும், ஊராலுண்ணப்படுவதெனவே ஊருக்கு அணித்தாய்க் கோடற்கெளிதாதல் பெறப்படுதலானும், ஊர் உணியெனவே, வேண்டியார் வேண்டாதார் என வேறுபாடொன்றுமில்லாது ஊரிலுள்ளார் யாவருமுண்ணப்படுவதென்பது தோன்றுதலானும் என்க. எனவே, இவ்வுவமையானே இப்பெற்றியவாய வள்ளற்றன்மைவாய்ந்த மன்னன் மாண்புகளும் காண்க.

ஆயின், பிறவுயிரைக் காத்தலையே மேற்கொண்டுநிற்கும் உலகிற்கொருதனிமுதலாய இறை தற்காப்புவேண்டாது நிற்றல்போலாது மாநிலமன்னன் தற்காப்பும் வேண்டிநிற்றலானும், அக்காவலசெய்யத் தனக்குமேற் பிறரொருவரின்மையானும் தற்காப்பிற் கருத்தைச் செலுத்தாது பிறவுயிரையே பேணிநிற்குமாறென்னையெனின், மகனை முறைசெய்த மனுவேந்தன் போலவும், தன்கைதுறைத்த வழுதிபோலவும் தன்முறை தடைபடவந்துழியும் அங்ஙனம்படாது அதனை நன்கு செலுத்தும் செங்கோலமன்னனை அம்முறையே காக்குமாதலின், அதனானே அவன் தற்காப்புப்பெறுவானால் காண்க. இதனை,

'இறைகாக்கும் வையகமெல்லாம்,
அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்'
(குறள்-547.)

என்ற குறளானும், அதற்குப் பரிமேலழகர்செய்த உரையானும் அறிக.

இனிச் சேதுவேந்தருரைத்ததனைச் சிறிது நோக்குவாம். அவ்வரசர், 'சேதுநாட்டுமக்கள் தம்மை அதன் இறையென்று வேறுவைத்துப் போற்றுவர்' என்றனர். அவ்வாறே மக்கள் சேதுவேந்தரைச் சேதுநாடுகாக்கும் இறையாகவேறு வைத்துப் போற்றுதலன்றியும், அவர் குலத்தினரை அந்நாட்டின் அரசினையளித்த முதலாகிய இராமமூர்த்தியேயாகக் கொண்டு போற்றலும், சேதுபதிதரிசனத்தைச் சேதுநாட்டில் தேவைநகரின்கட் கோயில்கொண்டுள்ள தெய்வமாகிய இராமலிங்க தரிசனமாகக்கொண்டு போற்றலும் மரபாமென்க*. இராமமூர்த்தி தன்னலத்தினும் மன்னுயிர்நலத்திற் கருத்துடையனாய் விளங்கியது மேலே விரிதலுரைக்கப்பட்டது. அந்நெறியே, சேதுவேந்தர் 'சேதுநாட்டுமக்கள்நலத்தை நாடுதற்கமைந்த தொண்டனாக என்னைக் கருதுகின்றேன்' என்றது குறிக்கத்தக்கதாகும். இன்னும் 'இங்ஙனமே, மேற்குறித்த விழாவின் றொடர்புடைய வேறோரமயத்தில், இம்மன்னர்தாம் தம் நலத்தினும் சேதுநாட்டின் நலத்தையே பெரிதாகக் கருதுவதாக விளம்பியதூஉம் இங்கு நினைக்கத்தகும். சேதுநாட்டின் இறையாம் முறையானும், கருதுமனநிலைகாட்டு காவியிற்றுவசமும் காவலநினது செல்வம்'* என்று பாஷாகவிசேகரரும் ஸேதுஸமஸ்தான மஹா வித்துவானுமாகிய ஸ்ரீமத். ரா. ராகவையங்கார் ஸ்வாமி அவர்களைக் குறித்துப் பாராட்டியவாறு, பிறர்நலம் பேணற்கமைந்து பெருஞ் செல்வத்திடையிருந்தும் உள்ளத்துறவுடையாராய் நிற்றல் காட்டும் காவித்துவசமுயர்த்திய மரபானும், சீராம மூர்த்தியைத் தன்குலமுதல்வராகக் கொள்ளும் நெறியானும், அம்மூர்த்தியாகவேகொண்டு மக்களாற் போற்றப்படும் நிலையானும் இவர்கள் தம்நாட்டுமக்கள் பக்கல இக்கருத்துக்கொண்டு நிற்றல் மிகவும ஏற்புடையதே. சேதுவேந்தர்க்குரிய விருதுகளுள் அடியார் வேலைக்காரன் எனபதொன்றுண்மையும் இண்டு நினைக்கத்தகும். இவர்கள பல்லாற்றானும் மன்னுயிரோம்பும் பணிபுரிந்து நெடிதுவாழுமாறு சீராமமூர்த்தி திருவருள்புரிவானாக.

இத்துணையுங் கூறியவாற்றானே, குடிமக்கட்கும் முடிமன்னர்க்குமிடைக்கிடந்த தொடர்பும், அவருள் ஒருவர் மற்றொருவர்பாற் கொள்ளத்தகுங் கருத்தும், அப்பெற்றியானே அவரொழுகலாறும் ஒருவாறு கூறப்பட்டனவாதலும், ஈண்டெடுத்துக் கொண்ட சேதுவேந்தரது அரியவுரை இப்பெற்றிகாட்டிச் சிறந்த பாராட்டுக்குரித்தாய் நிற்பதாதலும் அறியலாம். —செந்தமிழ்.

*இம்மாட்சிமையை, ஸேதுஸமஸ்தான மஹாவித்துவானும், பாஷாகவிசேகரருமாகிய ஸ்ரீ. ரா. இராகவையங்கார் ஸ்வாமி எழுதிய [illegible] தமிழ் என் [illegible]ராய்ச்சிநூலுட் காணலாம்.

*நாண்மங்கலக்கவிகள். செந்தமிழ்த்தொகுதி. 39. பகுதி 12.

## காந்திஜி கடிதம்பற்றிய விவாதம்

### மத்திய சட்டசபையில் வரவிருக்கும் தீர்மானம்

புதுடில்லி, யூன் 11—

26-வது இந்தியப் பாதுகாப்புச் சட்டம் செல்லாதென்று சமஷ்டிக் கோடு அளித்ததீர்ப்பும் ஜனாப் ஜின்னாவுக்கு மகாத்மாகாந்தி எழுதிய கடிதத்தை இந்திய அரசாங்கம் தடைசெய்த விஷயமும் இந்திய சட்டசபையின் வரப்போகும் கூட்டத்தில் விவாதத்திற்குக் கொண்டு வரப்படவிருக்கின்றன.

சர்தார் சாந்தசிங் கொண்டுவரவிருக்கும் இரண்டு தீர்மானங்களில் ஒன்று ஜனாப்ஜின்னாவுக்குக் காந்திஜி எழுதிய கடிதம்பற்றிய விவாதத்தைக் கிளப்ப முயலுகிறது.

சமஷ்டி கோட்டின் தீர்ப்பிற்குப் பிறகு காவற்கைதிகளை அரசாங்கம் விடுதலை செய்யத் தவறியதைப்பற்றியும் அரசியல் நெருக்கடியைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கையொன்றும் எடுக்காததைப்பற்றியும் விவாதிக்க மற்றொரு அங்கத்தினர் விரும்புகிறார்.

உணவு, துணி, செல்லறை நாணயம் ஆகியவைகளைப்பற்றியும் குற்றச்சாட்டுகளை நிரூபிக்காமல் ஜனங்களைக் காவலில் வைப்பதைப்பற்றியும் விவாதிக்க அதே அங்கத்தவர் ஒரு தீர்மானங்கொண்டுவர விருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைத் தமிழரின் சமயம்

திருமயிலை, திருவாளர், சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை

(முற்றொடர்)

இச்சடப் பிரபஞ்சத்திற் காணப்படும் அழகிய பொருள்களெல்லாம் கடவுளின் அருட்செயலை ஒவ்வொரு வழியில் நிரூபிப்பதாம். இது சடப்பிரபஞ்சக் காட்சி யறிவாம். இதனாற் சடப் பிரபஞ்சத்திற்கு அப்பால் அழகில்லை யென்றுவது அல்லது சடஅழகைத் தவிர வேறு அழகில்லை யென்றுவது தீர்மானிக்கப்படாது. சித்துப் பிரபஞ்சஅழகு சடப் பிரபஞ்சத்தைக் கடந்தது. இவ்வதீத அழகின் உருவமே சித்துப் பிரபஞ்சத்தில் அழகுள்ளதாகக்கருதப்படுவது. இத்தகைய சொரூபமே விநாயகர்திருவுருவம். அவ்வுருவம்அவரதுசித்சொரூபத்தைநமது மனக் கண்ணில் பதியச் செய்யக் கூடியது. நமக்குள்ள அழகைப்பற்றிய அறிவு இச்சடப் பிரபஞ்சத்தை ஒட்டியதே ஆயினும் சித்துப் பிரபஞ்ச அழகு சடவழக்கிற்கு வேறானது என்பதை உணர்தல் வேண்டும். உணர்ந்து விநாயகர் திருவுருவம் சடப்பிரபஞ்சத்திற் காணப்படும் உருவங்களினுஞ் சிறந்த தென்பதைக் கொள்ள வேண்டும்.

### சிவபெருமான்

சடத் தோற்றத்திலுங்கூட சிவபெருமானது திருவுருவம் பயங்கரமான தென்று சொல்லக்கூடாது. அது மிக அழகிய உருவம். அழகே உருவமானது அவ்வுருவம் கந்தபுராணத்தில் பின்வருமாறு சிறப்பிக்கப் பட்டுள்ளது:-

வாலிதாமதிச் சடிலமும்
பவளமால் வரையே
போலுமேனியு முக்கண்ணு நாற்
பெரும்புயமும்
நீல மாமறைக் கண்டமுங் கொண்டு
நின்றனனால்
மூலகாரண மிலலதோர் பராபர
முதல்வன்

அவருக்குப் பலஉருவங்கள் உண்டு. ஒன்று ஐந்து சிரங்களைக் கொண்டு மற்றொன்று இருபத்தைந்து முகங்களைக் கொண்டது. இவ்வுருவங்களெல்லாம் சாதாரண மனிதத்தோற்றத்தைச் சாராதவை. அவைகளைப் பயங்கரமானவை அல்லது கோரமானவை என்று கூறலாகாது. சில முக்கிய காரணங்களைக் கருதி அவை உண்டானவை. சித்தறிவு கொண்டு அவற்றை ஆராய்ந்தால் அவ்வுருவங்கள் பேரழகுள்ளனவாகக் காணப்படும். தத்துவப் பொருள்களை நுணுகி ஆராய்ந்து அறியாமல் ஸ்தூல அறிவு கொண்டு ஓர் முடிவு கட்டக்கூடாது. சடப் பிரபஞ்சத்திலுங்கூட,கண்களுக்கு அழகியதாகக் காணப்படும் பொருள்கள் பரிசத்திற்கும் வாசனைக்கும் ஏற்றதாக இரா. இதைப்போல் சித்துப்பிரபஞ்சத்தில் அழகுள்ள பொருள் சடப்பிரபஞ்சத்தில் அப்படி இராது. சித்சொரூப அழகு வெளித்தோற்றத்தில் காணப்படாதது. அவ்வழகு அவ்வுருவங்களின் தத்துவார்த்தத்தை உணரும்போது புலப்படும். சிவபெருமான் அவ்வச் சமயங்களுக்கேற்பக் கொண்ட கோலங்கள் பல உட்பொருள்களை விளக்குவன. திருக்கயிலாய மலையிலும் சிவலோகத்திலும் அவர் எழுந்தருளியிருக்கும் திவ்வியகோலம் சடக் கண்ணிற்கும் அழகு தரத்தக்கதாம்.

### சிவபெருமான் அணிந்திருக்கும் எலும்பு மாலைகள்

பிரம விஷ்ணுக்களின் மண்டையோடுகளை அவர் மாலையாகத் தரித்திருப்பதால் அவரைக் கோரரூபமுடையவ ரென்று ஏளனஞ் செய்கின்றனர். பாம்புகளைக் கங்கணமாகவும் தோலை ஆடையாகவும் அணிந்திருப்பதும் பரிகாசத்திற்கு இடந் தருகின்றது. அழகிற் சிறந்த சிவபெருமான் தனது உருவத்தை ஏன் எலும்பு, பாம்பு முதலிய ஆபரணங்களை அணிந்து விகாரப்படுத்த வேண்டும். மிகவும் அநாகரிகமுள்ள மனிதர்களுங் கூட எலும்பையும் பாம்பையும் அழகுள்ள பொருள்களாகக் கருதார். அப்படியிருந்தும் அவற்றை ஏன் கடவுளின ஆபரணங்களாகக் குறிப்பிட நேர்ந்தது. இவ்வினாக்களின் விடையை ஆராய்ந்தால் அதன் மூலமாக இவ்வாபரணங்களின் மேலான சித்துப் பொருள் விளங்கும்.

பிரம விஷ்ணுக்கள் படைத்தல் காத்தல் தொழில்களைப் பல கற்பகாலங்கள் புரிபவர். அவர்கள் இறந்ததும் அவர்கள் களேபரங்கள் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுக்கு அணிகலன்களாக மாறுகின்றன. இதிலிருந்து பெறப்படுவதென்னெனிற் சிவபெருமான் இறிலாதவ ரென்பதும், பிரம விஷ்ணுக்கள் பல ஆண்டுகள் வாழ்ந்த போதிலும் ஓர் நாள் இறக்க வேண்டியவர்களே. எலும்புமாலை அணிதல் உள்ளுறைப் பொருளுடைத்தாயிருத்தல் இதனால் தேறும். சித்துப் பொருள்களின் அழகை யாம் உள்ளபடி உணர்வதற்குச் சடப் பொருள்களின் அழகு நமக்குப் பேரிடையூறாக இருப்பது எல்லோருக்குந் தெரிந்த விஷயம். சடஉலகத்தில் மயங்காமல் கடைத்தேறும்படியும் சித்துணர்ச்சி பெறும்படியும் கடவுள் நமக்கு அருள் பாலிக்கின்றனர். இதனால் அவருடைய அழகான உருவத்தில கணக்கில்லாத பிரம விஷ்ணுக்களின் எலும்புகளைக் கோர்த்து மாலையாகத் தரித்திருக்கின்றார். இப்படி அவர் தரித்திருப்பது நம்மை எப்போதும் மரணத்திற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும் என்பதை ஞாபகப்படுத்தியபடியாம்.

நாம் கீழ்ப்படியிலுள்ள வரையும் கடவுளைச் சடப் பொருள்கள் வழியாகத்தான் காணவேண்டும். மேற்படி வேறு வேறு நமது மனதைச் சடப் பொருள்களிலிருந்து சிறிது சிறிதாக விடுவித்துச் சித்துப் பொருள்களிடத்து நாட்ட முயலவேண்டும். செலவம் சடப்பிரபஞ்சத்தில் விருமபத்தக்கது. அது கடவுளின் அருளாற் பெறக்கூடியது. நாம் சித்த அறிவில் முதிர்ச்சி பெற்றால் செல்வத்தை வெறுக்க வேண்டியது அவசியம். அது கடவுட் பக்திக்குச் சாதகமான தன்று. இதனால் அறிவதென்னெனின், சடப்பிரபஞ்சத்தில் நலலதாகத் தோற்றுவது சித்துப் பிரபஞ்சத்திலும் நன்மையைத் தராது. சடஅறிவுக்கு நலம் பயப்பது சித்தறிவுக்கு அப்படிப் பயவாது. ஆனால்,சித்துப்பிரபஞ்ச அழகிய தோற்றங்களெல்லாம் சடப்பிரபஞ்ச அறிவுக்கு அழகின்மையாகக் காணப்படுகின்றன.

பண்டைத் தமிழர்கள் சடப் பிரபஞ்ச அழகைக் கண்டறியாதவர்களல்லர். தங்கள்கடவுளுக்கு எலும்பு மாலையைத் தரிப்பதால அழகுள்ள ஆபரணமாக விளங்குமென்று கருதினவர்களல்லர். காட்டில் வசிக்கும் அநாகரிகமுள்ள மனிதர்களுங்கூடத் தங்கள் கடவுளுக்கு எலும்பு மாலையை அணியத் துணியார். அப்படி அவர்கள அணிந்தது தாங்கள் நாகரிகம் பெறுதற்கு முந்தி யென்று கொண்டாலும் நாகரிக மடைந்த பிறகேனும் அதனை விலக்கி யிருப்பார்கள். இதனால் அறியக்கிடப்பதென்னெனின் எலும்புமாலை தத்துவப் பொருளை விளக்கத்தக்கதானபடியால் அது சடப் பிரபஞ்சத்து அழகிய பொருள்களிற் சிறந்த தென்பதாம். இதனாற்றான் அது சிவபெருமானின் ஆபரணங்களில் ஒன்றாகக் கருதப்பட்டு இப்போதும் அவருக்குப் பூஷணமாக விளங்குகின்றது. அல்லாமல அது அநாகரிகமுள்ள காலத்தில்ஏற்பட்டதாயிருந்தால் தமிழர்கள் நாகரிக முதிர்ச்சி யடைந்த பிறகு உடனே நீக்கப்பட் டிருக்கும். உள்ளபடி என்பு மாலை அணிதல் அநாகரிகத்தால் உண்டா யிருந்தால் அதனை நாகரிக முதிர்ச்சி அறவே ஒழித்திருக்குமேயின்றி அதை நிலைநாட்டி அதற்குத் தத்துவார்த்தம் கற்பித்திராது. இதுவே கீழ்ச்சிமுறை அநாகரிகமான எண்ணம் தத்துவப் பொருளைத் தருவதாயிராது. அப்படித் தத்துவார்த்தத்தைத் தருவதாகுச் சமய சம்பந்தமான ஆதாரம் அதற்கு இருக்க வேண்டும். இவ்வாறில்லாமல் இருந்தால் அதைப் படித்தவர்கள ஒப்புக் கொள்வதரிது. இக்காலத்தில் சமயச் சார்பான சபைகளின் அங்கத்தினருங்கூட இலௌகீக மோகத்தால தத்துவப் பொருளை நிராகரிக்கின்றனர். சமய ஆராய்ச்சியில் சடப் பொருளைச் சித்தறிவு கொண்டு உணர வேண்டும். தங்கள் சமயத்தில் சித்துப்பொருள் மிகுதியாக உடையவர்கள் இதனைக் கவனிக்க வேண்டியது அவசியம். இப்படி யாம் செய்வோமாயின் சிவபெருமான் அணிந்துள்ள ஆபரணங்களின் உள்ளுறைப் பொருள் நமக்குச் செவ்விதாக விளங்கும். இதே கருததுரை சைவசமயத்தில் இவை அழகுபட விளக்கப்பட்டிருப்பதையும யாம் கண்டறியலாம்.

—வரும்.

---

### கடிதம்

3ம் பக்கத் தொடர்ச்சி

இவர், இத்தகைய பெரிய பேராசிரியர் பதவியை விட்டு விலகிய காரணத்தை யாவரும் அறிவர். சுயமரியாதை, தமிழர், தமிழ் என்ற அபிமான சிந்தை மிக்குடைய இவரை அபேட்சகராக எங்கள் பிரிவுக்குப் பெற்றதையிட்டு முதல் நாங்கள் பெருமையடைகின்றோம்.

R. T. சுப்பிரமணியம்,
முள்ளியவளை.

---

## கேட்பாரில்லாக் கூப்பன் புத்தகங்கள்

### பல்லாயிரக்கணக்கானவை அதிகாரிகளிடம்குவிந்திருக்கின்றன

பெரும்பாலானோர் கூப்பன் புத்தக விநியோகத்தின்போது அவர்களின் வீடுகளிலில்லாதிருந்த காரணத்தினாற் பல்லாயிரக்கணக்கான அரிசிக் கூப்பன் புத்தகங்கள் உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் காரியாலயத்துக்குத் திரும்பி வந்து சேர்ந்திருப்பது அதிகாரிகளுக்குப் போரச்சரியத்தை விளைத்திருக்கிறது.

இதுமட்டுமன்றி இந்தியாவுக்குத் திரும்பிச் செல்வோர் பலர் தங்களுடைய கூப்பன் புத்தகங்களைத் திருப்பிக் கொடுத்திருப்பதினாலும் விநியோகிக்கப்பட்ட பல புத்தகங்களும் திரும்பி வந்து சேர்ந்திருக்கின்றன.

### 'உடனே எடுத்துக் கொள்ளுங்கள்'

இதுவரை தங்களுடைய அரிசிக் கூப்பன் புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளத் தவறியவர்களுக்கு அடுத்த சில தினங்கள்வரை கூப்பன் புத்தகங்கள் விநியோகிக்கப்படும். கடைசிநேரத்தில் வந்து அதிகாரிகளுக்குத் தொல்லையுண்டுபண்ணுவிருப்பதற்காகப் புத்தகம் கிடைக்காத பல்லாயிரக் கணக்கானோரும் இந்தச் சில நாட்களுக்குள் தங்களுக்குரிய கூப்பன் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

ஜனநெருக்கடியிற் பலருக்குக் கூப்பன் புத்தகங்கள் கிடைக்காமற் போகக் கூடுமாதலால் உடனே சென்று தத்தமக்குரிய புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கூப்பன் புத்தகம் கிடைக்காதோர் வற்புறுத்தப்படுகிறார்கள்.

---


# ஓரியன்ரல் பாங்க் ஒவ் மலாயா லிமிற்றெட்

(ஐக்கிய மலாய் நாடுகளில் பங்காளரின் நிதி வரைவுளதாய் நிறுவப்பெற்றது)

## 8, மணிக்கூட்டுத்தெரு, யாழ்ப்பாணம்

மாட்சிமைதங்கிய தேசாதிபதியவர்களின் அனுமதியும் அங்கீகாரமும் பெற்று வடஇலங்கையில் சகலவித வங்கித்துறைகளிலும் ஈடுபட்டு உழைக்கும் **தேசியவங்கி** இது ஒன்றே.

இவ்விடத்தில்:—

1. நடைமுறை, நிரந்தரக் கட்டணங்கள் ஏற்றுக்கொள்ளுதல்;
2. அங்கீகரிக்கக்கூடிய தகுந்த பொறுப்புக்கு இலகுவானமுறையில் வட்டிக்குக் கடன்கொடுத்து வாங்குதல்;
3. இந்தியாவின் சகல பட்டினங்களுக்குத் தந்தியுண்டியல்களும்; கொழும்பு, மதுரை, சென்னை, தூத்துக்குடி முதலிய இடங்களுக்குச் செக்குகளும், உண்டியல்களும் பரிமாறுதல்;
4. இந்திய நோட்டுகள் வாங்குதல் விற்றல் முதலியன சகலருடைய வசதிக்குமேற்ப நடைபெற்று வருகின்றன.

[illegible],
மானேஜர்.

(Mis. 206. 25-2-43—24-8-43) (வி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம்பலவிதக்கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

அந்த அம்மாவிடத்திலும் ஐயாவிடத்திலும் என்னை ஒப்புவித்து, எனக்கும் ஆகவேண்டிய புத்தி சொல்லிவிட்டுப் போக, நானும் அழுதேன். அவரும் கண்கலங்கிக் கொண்டு என்னைப் பிரிந்துபோனார்; போனபிறகும் பலமாசங்களாக அவர் இடையிடையே எனக்குத் "தபால்" எழுதினார்; நானும் எழுதினேன்; பிறகு அவருடைய தபால் வரவில்லை, அப்படியிருக்கவும் நான் நாலு ஐந்துமுறை தபால் போட்டேன், பதில் இல்லை; நான் என்ன செய்வேன், அம்மா, கவலைப்பட்டுக்கொண்டு தபால் எழுதாமல் விட்டுவிட்டேன்; என் அண்ணாவின் கதி என்னவானதோ அறியேன்" என்று சொல்லி அந்தப் பெண் கண்கலங்குவதற்கிடையில், கேட்டுக்கொண்டிருந்த காஞ்சனமாலையின் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாக வடிந்தது. பின்பு அந்தச் சிங்களப்பெண்ணே தான் ஒருவாறு தேறிக்கொண்டு காஞ்சனமாலையையுந் தேற்றி, தன்னுடைய எஞ்சிய வரலாற்றையுஞ் சொல்வாளாயினாள்.

## "ஐயா நல்லவர் அம்மா பொல்லாதவள்"

பிள்ளை பராக்காட்டுதல் முதலாக அவர்கள் சொன்ன சொன்ன வேலைகளையெல்லாம் தவறாமற் செய்துவந்தேன்; அந்த ஐயாவும் அம்மாவும் என்மேல் அதிக விசுவாசமும் அன்பும் பாராட்டி நடத்தி வந்தார்கள்; சிலநாட்கள் செல்ல நான் அங்கேதானே பெரியபெண்ணானேன்; அதன்பின்பு ஐயா என்மேல் அன்புபாராட்டி வந்தாரேனும் அந்த அம்மாள் என்னை வெறுக்கத் தலைப்பட்டாள்; நான் ஒரு குற்றமுஞ் செய்யாதிருந்தாலும் அம்மா என்னைக் குறைசொல்லி வந்தாள்; அறியாமையால் ஒரு சின்னத்தவறு செய்தாலும், நான் வைத்திருக்கும்போது தன் பிள்ளை அழுதாலும் என்னை அடிப்பாள்; முந்தி என்னையே உணவு எடுத்து இட்டு உண்ணவிட்டு வந்த அம்மாள், பிறகு தானே எனக்கு ஆகாரந்தரத் தொடங்கினாள்; பிறகு என் வயிறுநிறைய ஆகாரந்தருவதையும் குறைத்து வந்தாள்; இப்படியெல்லாம் துன்பப்படுத்தவும் நான் அந்த ஐயாவுக்குச் சொல்லாமல் பொறுமையோடு இருந்தேன்; ஒரு நாள், ஐயா உத்தியோகத்தானத்திலிருந்து வீட்டிற்கு மீண்டுவரும்போது, அம்மா என்னை யடிப்பதைக் கண்டு, "ஐயோ, பாவம், ஏன் இந்தப்பிள்ளைக்கு அடிக்கிறாய்! எங்களை நம்பிவந்த பிள்ளையல்லவா? நம்மபிள்ளை வேறு இவள் வேறா? நீ அடித்தால் இவள் ஆருக்குப் போய் முறையிடுவது; உனக்குப் பிடிக்காவிட்டால், இவளுடைய தமையனைக் கூப்பிட்டு அவன் கையில் இவளைஒப்புவித்து விடலாமே" என்று சற்றுக் கண்டித்துப் பேசினார். அந்த அம்மாளுக்கு வந்தது கோபம்! ஐயா பார்த்திருக்கவே எனக்குப் பிறகும் இரண்டு மூன்று அடி யடித்தாள்; ஐயாவையுஞ் சேர்த்துத்திட்டினாள்; ஏசினாள்; "வேலைக்காறியென்று வந்தவளைத் தூக்கித் தலையிலே வைக்கவாசொல்லுகிறீர்? ஒன்றில் நான் இந்த வீட்டில் இருக்க இவள் போகவேணும்; இல்லையேல் இவளிருக்க நான் இந்த வீட்டைவிட்டு வெளியே போய்விடவேணும்" என்று வாயில்வந்தபடி அந்த அம்மாள் பேசினாள், ஏசினாள், பேய்க்கூத்தாடினாள், ஐயாவுக்கு அந்தநேரம் ஆகாரங் கொடுக்காமல் அழுதுகொண்டுபோய்ப் படுக்கையிற் குப்புறப் படுத்துவிட்டாள் அம்மாள்; ஐயாவும் வெகுநேரம் யோசித்தபடியிருந்தார்; அதற்கிடையில் யாரோ வைத்தியத்திற்குக் கூட்டிக்கொண்டு போவதற்கு ஐயாவிடம் வர அவர் அப்படியே 'காறில்' ஏறிக்கொண்டு போய்விட்டார்; அந்த அம்மாள் பேசிய பேச்சினால், என்மீதும் ஐயாமீதும் அம்மாள் ஏதோ சந்தேகப்படுகிறாள் என்று நான் உத்தேசித்துக்கொண்டு, இனி இங்கே இருப்பது புத்தியல்ல என நிச்சயம்பண்ணி, அந்த அம்மாள் உறங்கிக் கிடப்பதைக்கண்டு எவருக்குஞ் சொல்லாமல் மெல்லப் புறப்பட்டு வெகுதூரம் அலைந்து திரிந்து இந்த மார்க்கமாக வரும்போது, இந்த இடத்தில் நீங்கள் இருப்பதைக் கண்டு வந்தேன், அம்மா, இது தான் என் வரலாறு" என்று கவலையோடு சொல்லிமுடித்தாள்; இவைகளையெல்லாங் கேட்ட காஞ்சனம் பெரிதும் இரக்கங்கொண்டவளாய் தங்கள் பணிப்பெண்ணைப் பார்த்து "பாவம், பசிபோலிருக்கிறது; நீ அடுக்களைப்பக்கம் கூட்டிக் கொண்டுபோய் ஏதும் ஆகாரம் கொடு" என்று சொல்ல, அவள் அப்படியே அந்தச் சிங்களப் பெண்ணை அடுக்களைப்பக்கங் கூட்டிக் கொண்டுபோய் ஆகாரம் அளிக்க, அவள் ஏற்று உண்டு கொண்டிருந்தாள்.

## புதிதாய் வந்தவரை நம்பவொண்ணாது

இப்படி யிருக்குஞ் சமயத்திலே முருகேசபிள்ளையும் சண்பகத்தம்மாளும் தம்வீட்டிற்கு மீண்டு வந்தார்கள். வந்தபின் அச் சிங்களப் பெண் யாரென்று தாய் மகளைக் கேட்க, மகள், அவள் தனக்கு மூந்திச் சொன்ன வரலாறுகளை யெல்லாந் தாய்க்குச் சொன்னாள்; கேட்ட தாய் சிறிது நேரம் யோசித்துவிட்டு "மகளே, அவள் என்ன தான் சொன்னாலும், தோற்றத்தில் எவ்வளவு நல்லவளாகக் காணப்பட்டாலும் புதிதாக வந்தவளை நம்பலாகாது; ஆண் பிள்ளையானாலும் காரியமில்லை; இவளெனிலோ பெண்ணாய்ப் பிறந்தவள், அல்லாமலும் பராயமான பெண்ணென்று நீ சொல்லுகிறாய்; இவள் யார் வீட்டில் நின்றாளோ, என்ன பிழையினால் துரத்தப்பட்டாளோ, அவைகளையெல்லாம் விசாரித்தறியாமல் இவளை நாம் வீட்டில் அடுத்து வைப்பது புத்தியல்லவடி யம்மா; எந்தக் காரியத்தையும் யோசித்துச் செய்ய வேண்டுமடி கண்ணே' என்று சொல்லுதலும், "அம்மா, நீங்கள் அவளை வேலைக்காரியாக வைத்திருக்க இஷ்டமானால் வைத்திருக்கலாம்; இல்லையேல் விட்டு விடலாம்; ஆனால், திக்கற்று வந்த ஏழைக்கு இரண்டு மூன்று நாள் ஒதுங்கி யிருக்க இடங் கொடுப்பதால் புண்ணியமல்லாமல் பிழை வரமாட்டாதம்மா; ஆணப் பிறந்தவன் வந்தால், இங்கே இடமில்லையப்பா, எங்கேனும் சத்திரத்திலே மடத்திலே போயிரு என்று சொல்லலாம்; நம்மைப்போல ஒரு குமர்ப் பிள்ளை இரண்டு நாளைக்கு ஒதுங்கியிருக்க இடங் கேட்டால் இல்லையென்று சொல்லுவது தருமமா தாயே; இப்படியான கதி எவருக்கும் வரக் கூடுமம்மா; நாம் நன்மை செய்தால் நமக்குத் தீமை நேரமாட்டாது" என்று பரிந்து பேசினாள் காஞ்சனம்; "சரி, நான் ஒன்றும் பேசவில்லை, உங்கள் ஐயாவைக் கேட்டுச் சொல்லுகிறேன்" என்றுவிட்டுச் சண்பகத்தம்மாள் முருகேசபிள்ளையிடம் போய் விஷயத்தைச் சொல்லி, என்ன செய்வதெனக் கேட்க, அவர் "எங்கள் மகளுடைய விருப்பம் என்ன" வென்று மனைவியைக் கேட்க மனையாள், "உங்கள் மகள் எவரையும் போ என்று சொல்லமாட்டாளே; அந்தப் பெண் இங்கே இருக்கட்டும் என்பதுதான் உங்கள் மகளுடைய விருப்பம்; அதனாற்றான் உங்களைக் கேட்க வந்தேன்" என்று பதில் சொன்னாள். "சரி, பிள்ளைக்குப் பிரியமானால் அவள் சில நாள் இருக்கலாகும்; இதனால் என்ன வரப்போகிறது" என்று சொன்னார். அன்று தொடக்கம் அந்தச் சிங்களப் பெண் அங்கே தானே இருந்து அவர்கள் காலால் இட்ட வேலைகளையெல்லாம் கையாற் செய்து இதமாக நடந்து வந்தாள். தாய் தகப்பன் மகள் மூவரும் அவளுடைய போக்கைப் பார்த்து அவளுடைய [illegible] வாசம் பாராட்டினார்கள்.

(வரும்)

# பண்ணைப் பாலத்தை அமைக்க வற்புறுத்தல்

## பட்டினசபைக் கட்டிடத்தில் நடைபெற்ற போதக் கூட்டம்

யாழ்ப்பாணம் யூன் 12

யாழ்ப்பாணவாசிகளின் பொதுக் கூட்டமொன்று இன்று பிற்பகல் பட்டின சபை மண்டபத்தில் முடிக்குரிய அத்வக்காத் திரு. A. V. குலசிங்கமவர்களின் தலைமையில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தைத் தீவுகளுடன் இணைக்கும் பொருட்டு உடனே பண்ணைப் பாலத்தை அமைக்கும்படி அரசாங்கத்தைக் கோருவதற்காகவே இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் காதி எஸ். எம். அபூபக்கர் தற்காலிக காரியதரிசியாகக் கடமையாற்றினார்.

குறித்த கூட்டத்தில் திரு. ஸி. பொன்னம்பலம் பேசும்போது யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் தேவைகள் அலக்ஷியஞ் செய்யப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டு டிஸ்திரிக்கைச் சீர்திருத்துவதன் மூலமே சிங்கள மக்கள் தமிழரின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள முடியுமென்று கூறினார்.

தலைவர் பேசிய விபரம் பின் வருமாறு:—

பண்ணைப் பாலத்தை அமைக்கும்படி 1867 ம் ஆண்டு முதற் கிளர்ச்சி செய்யப்பட்டது. இவ் வசதியை ஏற்படுத்தும் அவசியம் பற்றி எம்பகுதிக்கு விஜயஞ் செய்த பல தேசாதிபதிகளுக்கு அடிக்கடி வற்புறுத்தப்பட்டதுண்டு. 1926ம் ஆண்டு ஒரு பாலத்தை அமைக்கும்படி கோரி இலங்கைத் தேசியக் காங்கிரஸ் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. யாழ்ப்பாணச் சங்கமும் இதையொட்டி அடிக்கடி கிளர்ச்சி செய்தது. இலங்கையின் சகல பகுதிகளிலுமுள்ள மதஸ்தர்களும் வழிபடும் புனிதஸ்தலங்கள் குறித்த தீவுகளிலிருப்பதான பாலத்தை அமைப்பதன் பலனாக ரோமன் கத்தோலிக்கர், முஸ்லீம்கள், இந்துக்கள், பௌத்தர்கள முதலியோர் பயன் பெறுவர்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் பல திட்டங்களை அமைக்கும் விஷயத்தில அரசாங்கம் லட்சக்கணக்கான ரூபாயைச் செலவழித்து வரும்போது இப்பாலத்துக்குத் தேவைப்படும் பணம் மிக்க சொற்பமாகும்.

திரு. பொன்னம்பலம் கொண்டு வந்த பிரேரணை பின்வருமாறு:—

"பண்ணைப் படகுப் போக்கு வரத்து மிக்க திருப்திகரமற்றதாக இருப்பதாலும் பல தலைமுறைகளாக மக்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்பட்டு வருவதாலும் பண்ணைப் பாலத்தை அமைக்கும் வேலையை உடனே ஆரம்பிக்கும்படி யாழ்ப்பாண டிஸ்திறிக் மக்களின் பொதுக் கூட்டம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறது.

வட பகுதியில் இருபாலங்கள் அமைக்கப்பட்டு வருவதால் மற்றொன்றை அமைக்க முடியவில்லையென்று போக்கு வரத்து மந்திரி அபிப்பிராயப்படுவதாகத் திரு. பொன்னம்பலம் கூறினார். சிங்களவர்கள் தங்கள் செய்கைகள் மூலம் சிறுபான்மைக் கட்சியினரின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் அவர் கூறினார்.

பாலத்தை அமைப்பதால் முஸ்லிம்களும் சகாய மடைவரென்று காதி எஸ். எம். அபூபக்கர் குறிப்பிட்டுப் பிரேரணையை ஆமோதித்தார்.

யாழ்ப்பாணக் கூட்டுறவு மத்திய வங்கியின் தலைவர் முதலியார் V. பொன்னம்பலமுந் தீர்மானத்தை ஆதரித்துப்பேசினார். பிரேரணை ஏகமனசாக நிறைவேற்றப்பட்டது.

அடுத்தபடியாகப் பழைய டிஸ்திறிக் நீதிபதி திரு. ஏ. ஆர். சுப்பிரமணியம் கொண்டு வந்த பிரேரணை பின்வருமாறு:—

"பிரதான தீர்மானத்தை நடைக்குக் கொண்டு வரும் பொருட்டு அரசாங்கசபையில் ஓர் உபமானப்பத்தை ஒதுக்கும்படி அல்லது 1943-44 ம் வருட வரவு செலவுத் திட்டத்தில் வசதியேற்படுத்தும்படி இக்கூட்டம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறது." திரு. ஸி. பாலசிங்கம் பிரேரணையை ஆமோதித்தார்.

மிஸ்டர் அரியபத்திரனு பேசும்போது யாழ்ப்பாணத்தில் ஏதாவது இக்கூட்டத்தின் நோக்கத்தை நிராகரிக்கவில்லையென்று குறிப்பிட்டுப் பட்டினசபைப் பகுதியைத் தீவுகளோடு இணைக்க உடனே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கூறினார்.

இத்தீர்மானமும் ஏகமனசாக நிறைவேறியது.

பட்டின சபைத் தலைவர் திரு. K. ஐயாத்துரை பேசும்போது தாம் இவ்விஷயத்தில் முழுமனசுடனும் ஒத்துழைப்பதாக உறுதி கூறினார்.

# விவாகம்

## சோமசுந்தரம்—இராஜலக்ஷுமி

சென்ற திங்கட்கிழமை பின்று இரவு 10 மணியளவி லுள்ள கும்ப லக்கின சுபமுகூர்த்தத்தில் நல்லூர் திரு. S. சரவணமுத்து (Retired Apothecary) அவர்களின் புதல்வன் திருவளர் செல்வன் சோமசுந்தரத்துக்கும் (Apothecary) மண்டைதீவு S. கணபதிப்பிள்ளை யவர்களின் புதல்வியும், அவ்வூர்க் கிராமச் சங்கத்தலைவர்திரு.க.கைலாசபிள்ளை அவர்களின் சகோதரியுமாகிய திருவளர் செல்வி இராஜலக்ஷுமிக்கும் மணமகளில்லத்தில் விவாகம் மிக்க சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் சகல செல்வமும் பெற்று நீடுவாழ எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிப்பாராக.

# அடைவுநகைஏலவிற்பனை

1942-ம் ஆண்டு மாசி மாசம் 11-ந் திகதிக்குமுன் கொட்டடி மா. கு. தெண்டாயுதபாணியிடம் அடைவு வைத்து மீளாத நகைகள் 1943 ம் ஆண்டு ஆடி மாதம் 10-ந் தேதி முற்பகல் 10 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் 18 ம் இலக்கத்தில் உள்ள எனது கந்தோரில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

M. K. சங்கரப்பிள்ளை,
அசைனி.
(Assignee D. C. J.
Insol. 196 & 197.)

8-6-43.
Mis 58 17.6.43.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றத்துக்கு இந்தியர்

### பிரைட்டன் தொகுதிக்கு பானர்ஜி நிற்கலாம்

பிரைட்டன் யூன் 12

பிரபல வங்காளப் பிராமண குடும்பத்தைச் சேர்ந்த சங்கை பிட் பானர்ஜி என்ற ஓர் இந்தியரைப் பாராளுமன்றத்தில் பிரைட்டன் தொகுதிக்கு ஒரு லிபரல்கட்சி அபேக்ஷகராக நிறுத்த இங்குள்ள பிரைட்டன் லிபரல்கள் முடிவுசெய்திருக்கின்றனர்.

சங்கை மிஸ்றர். பானர்ஜி இங்கிலாந்திலுள்ள பிருத்தானிய இந்திய கொம்மன்வெல்த் லீக்கின் இப்போதைய நிர்வாகக் காரியதரிசியாவர். சென்ற 32 வருடங்களாக இங்கிலாந்திற் பிரபல பாதிரியாக இருந்து வருகிறார். அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இந்திய தேசீயக் காங்கிரஸிற்கு முதற் றலைவராகப் பதவி வகித்திருக்கிறார். அவருடைய மனைவியார் ஓர் ஆங்கில மாதாகும். அவர்களுடைய மகனான லெப்டினண்ட் ஸ்டீபின் பானர்ஜி இராணுவத்திற் சேருமுன் 'மாஞ்செஸ்டர் கார்டிய'னிற் பதவி வகித்திருந்தார்.

## விவாகம்

வண்ணார்பண்ணையிற் பிரபல பிறக்றாசவிருந்த திரு. இ. க. சிவப்பிரகாசமவர்களின் கனிஷ்ட புத்திரனும், கொழும்பு றவர் கமிஷன் பகுதியில் உத்தியோகம் வகித்திருப்பவருமாகிய திரு. இராமநாதனவர்களுக்கும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியருளொருவராகிய திரு. K. S. இராசரத்தினமவர்களின் புத்திரி திருவளர்செல்வி யோகாம்பிகையம்மாளுக்கும் சென்ற திங்கட்கிழமை (14-6-43) இரவு 11 மணி வரையில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில், வண் கிழக்கிலுள்ள "சர்வ சித்தி" எனவழங்கும் மணமகள் இல்லத்தில் விவாகம் விதிப்படி இனிது நிறைவேறியது. மணமக்கள் அட்ட ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் இறைவன் திருவருள் முன்னிற்பதாக.

❀

வட்டுக்கோட்டை திரு. மூத்ததம்பியவர்களின் புதல்வரும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகார சபையின் இலேககராயிருப்பவருமாகிய திரு. நடராசா அவர்களுக்கும், வேலணைமேற்கு திரு. செல்வத்துரையவர்களின்புதல்வி திருவளர்செல்வி மங்கையர்க்கரசிக்கும் சென்ற திங்கட்கிழமை இரவு 11 மணி வரையில்நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில், மணமகளில்லத்திலே விவாகம் பல சுற்றமித்திரர் சமூகத்தில் வெகு சிறப்பாக நிறைவெய்தியது. தம்பதிகள் சகல செல்வங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் இறைவன் திருவருள் புரிவாராக.

❀

காரைநகரைச் சேர்ந்த தங்கோடை திரு. K. சின்னத்துரையவர்களுக்கும், பிரபல நியாயதுரந்தாரும் முடிக்குரிய நியாயவாதியாகக் கடமை பார்ப்பவரும், ஆங்கில இந்து சாதனப் பத்திரிகையின் ஆசிரியருமாகிய திரு. A. V. குலசிங்கமவர்களின் கனிஷ்ட புத்திரியாகிய திருவளர் செல்வி சின்னம்மாளுக்கும் சென்ற திங்கட்கிழமை இரவு 11 மணி வரையில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில், வண்ணார்பண்ணையிலுள்ள மணமகள் வாசஸ்தானத்தில் விவாகம் விதிப்படி சிறப்புற நிகழ்ந்தது. தம்பதிகள் சகல செல்வங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனது திருவருளை வேண்டுகின்றோம்.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

( † இசைத் தட்டு )

### வெள்ளி யூன் 18

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில்செய்திகள் 8 காலைக்கீதம்† 8-15 ஆங்கிலத்தில்செய்திகள் 8-30 கே ராமசாமி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 கே ராமசாமி பாட்டு2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2.30 முடிவு.

மாலை 5 கே வி நடராஜன் பாட்டு 5 46 தூரான்ஷீப் 6 என் எஸ் ராஜண்ணுபிள்ளை நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 இலக்கியவாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45பாலைவனத்தில் ஓர் இரவு தொடர்கதை 8 என் எஸ் ராஜண்ணுபிள்ளை நாகஸ்வரம் 8-30 கே வி நடராஜன் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலக விவகாரங்கள்ஆங்கிலம் 10 கதம்பம்† 10-30 முடிவு.

### சனி யூன் 19

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 மாயவரம் வி கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 9 முடிவு.

1 ஸி சங்கரலிங்கம்பிள்ளை பாட்டு 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 ரத்திமேளம்† 2 தமிழில் செய்திகள் 2-05 மாயவரம் வி கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 2-30 முடிவு.

மாலை: 5 ஸி சங்கரலிங்கம்பிள்ளை பாட்டு 5-40 திருவாரூர் மும்மணிக் கோவை 6 படப் பாட்டுகள்† 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 ஸ்திரசமூகம் விவாதம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 வழிப்போக்கன் இசை நாடகம் 8 மதராஸில் உள்ளபடி (எம் கே தியாகராஜபாகவதர் பாட்டு) 9-15 லலிதா வெஙகடராம்† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 அம்பா நீலாம்பரி ஆ இ ரே வித்வான்கள் 10இசைவேளை† 10-30முடிவு.

### ஞாயிறு யூன் 20

காலை 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 இரு தூரல்கள்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி ஆர் கல்யாணகிருஷ்ணஐயர் வீணை 9 முடிவு.

12 கதம்பம்† 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் ஜானம்மா, எஸ் கே சுமதி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 இசைக்கதம்பம்† 2-30 முடிவு.

மாலை 5 டி ஆர் கலியாணகிருஷ்ண ஐயர் வீணை 5.40 தேவாராதனை 6 எஸ் ஜானம்மா, எஸ் கே சுமதி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நான் கண்ட பிரிட்டன் பேச்சு 7-30அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 என் ஸி வஸந்தகோகிலம்† 8 திருவையாறு டி வைத்தியநாத ஐயர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில்செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 மூன்று வயலின்கள் 10 இசைவேளை† 10-30 முடிவு.

### திங்கள் யூன் 21

காலை 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில்செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஐயம்பேட்டை வேணுகோபால பிள்ளை நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 ஸி எஸ் செல்வரத்தினம் பிள்ளை பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை: 5 ஐயம்பேட்டை வேணுகோபாலபிள்ளை நாகஸ்வரம் 5-45 இசைப் பயிற்சி 6 ஸி எஸ் செல்வரத்தினம் பிள்ளை பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 டாக்கி இசை† 8 சாத்தூர் ஏ ஜி சுப்பிரமணியம் பாட்டு 9 20 ஆங்கிலத்தில் செய்திகள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 வியோலா புல்லாங்குழல் 10 டெல்லியில் உள்ளபடி 10-30 முடிவு

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் உரும்பராய் காலஞ் சென்ற சின்னத்தம்பி வேலாயுதர் பெண் கனகம்மாவின் ஆதனத்தைப்பற்றி.

தத்துவ வழக்கு இலக்கம் 34,

எதிராக

உரும்பராய் சின்னத்தம்பி வேலாயுதம் தத்துவகாறன்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் மேற்குறித்த வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1943-ம் ஞு ஆடிமீ 10ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிகளின் விபரம்

1 உரும்பராய் இறை சின்குரன் பர, நி. இ, 4 லும் வீடுகளும் மற்றும் புரோசனங்களும் எல்லைகிழக்கு இரண்டாம் காணி, வடக்கு பொன்னையா பெண் அன்னலட்சுமியின் ஆதனம், மேற்கு தம்பித்துரை பெண் புஷ்பமணியின் ஆதனம், தெற்கு ஒழுங்கை இது அடங்கலில் சொரியலாய் அரைவாசி.

2 மேற்படி இறை சின்குரன் பர. நி. இ. 3 லும் புரோசனங்களும், எல்லை கிழக்கு சின்னத்தம்பி இராசையாவின் ஆதனம், வடக்கு பொன்னையா பெண் அன்னலட்சுமியின் ஆதனம், மேற்கு முதலாம் காணி, தெற்கு ஒழுங்கை இது அடங்கலில் சொரியலாய் $\frac{5}{6}$ பங்கு.

க. பொன்னப்பா,
வெந்தீஸ் மேஸ்தரும் கொம்மிஷனரும்.
Licensed Auctioneer & Commissioner
இணுவில் 11.6-43,

Mis 59, 17.6.43.

## கல்விப்பகுதி அதிகாரிகள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிய அவகாச மில்லாது போய்விடுகிறது.

கல்விப் பகுதியின் தலைமைக் காரியாலயத்தில வேலை செய்து வரும் சிப்பந்திகளுக்கு இந்தத் திட்டத்தின் பயனுகப் போதிய அளவு அவகாசம் கிடைக்கு மென்றும அந்த அவகாசம் நிர்வாக வேலைகளில் ஈடுபட அவர்களுக்கு இடமளிக்கு மென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.


## விளம்பர விகிதம்

முதன் முறைக்கு

| | |
|---|---|
| ஒரு கலம் ரூபா 10-00 | அரைக்கலம் ரூபா 5-50 |
| கால் கலம் ரூபா 4-00 | ஒரு அங்குலம் ரூ. 1-00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படாத விளம்பரங்கள் ஏற்கப்பட மாட்டா.



சிறுபிள்ளை வைத்தியத்திலும் ஏனைய வைத்தியங்களிலும் சித்திபெற்ற சில்லாலை முத்துவைத்தியசாலை

சாதாரணமாகச் சிறுவர்களுக்கு வரும் கிரந்தி, சலதோஷம், வயிற்றோட்டம் காய்ச்சல்முதலிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற அரியபெரிய மருந்துகளும் நெடுநாட்பட்ட இருமல் மேகம் கிரந்தி வாதங்களை அகற்றும் அனுபவம்வாய்ந்த சிறந்த மருந்துகளும், எண்ணெய்வகைகளும் எம்மிடம்ஏராளமாயுண்டு. ஏழைகளையும் தனவந்தர்களையும் ஒரே சீராய் நடத்தும் அரசினரின் அங்கிகாரம்பெற்ற சில்லாலை முத்துவைத்தியர்

அ. செபஸ்தியாம்பிள்ளை. பெரியதெரு, நம். 160, மேல்வீடு, யாழ்ப்பாணம்

(Q. 30. 11-5.43—10-8.43)

தேயிலை மார்க்கெற்றிங் இலாகாத் தேயிலை

யாழ்ப்பாணம் கோப்பறேற்றிவ் ஸ்ரோர்ஸ் லிமிற்றெட்டாரிடம் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு கொடுக்கப்படும்.

யாழ்ப்பாணம், கோப்பறேற்றிவ் ஸ்ரோர்ஸ் லிமிற்றெட்,
150, ஆஸ்பத்திரித்தெரு, பெரியகடை, யாழ்ப்பாணம்,
மார்க்கெற்றிங் இலாகாத் தேயிலைக்கு ஏஜெண்டுகள்.

Mis. 45. 3-6—28-6-43.

தி மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க்கொம்பனி)

கொளுக்கி ஓடுகள் எங்களிடம் விலைக்கு இருக்கின்றன

"புரோப்ரைட்டர்"—K. A. இரத்தினசிங்கம்,
பெரியகடை, யாழ்ப்பாணம்,

Y 19. 4-3-42——3-3-43


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday 17, June 1943.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org